தஞ்சை மாவட்டத்திலிருந்து நெல் வெளியே போகிறதே. அதற்கு யாராவது பொறுப்பாக இருப்பார்களே என்றும் விளக்கிச் சொன்னோம்.

வெளியே கொடுக்க மாட்டேன் என்று சொல்கிறவர்கள் சிலயிடங்களில் இருக்கிறார்கள்; அவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் அல்லவா என்றும் அவர்களிடம் எடுத்துச் சொன்னோம். அவர்கள் அரசோடு ஒத்துழைக்க உறுதி தந்தார்கள். தஞ்சை மாவட்ட விவசாயிகளைப் பொறுத்த வரையில்—சிரமங்கள் இருக்கும் இடங்களில் நடவடிக்கைகள் எடுப்பார்கள். அவர்கள் அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு தருவார்கள். உண்ணாவிரதத்தைத் திரும்பப் பெறுவதாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒத்திவைப்புப் பிரேரணையை கொடுத் திருந்தாலும் அவர்களும் அவர்களுக்குத் தகுந்த ஆலோசனைகள் கூறுவது நாட்டுக்கு நல்லது எனக் கூறி இதில் விவாதிப்பதற்கு வேறு பொருள் இல்லை. ஏற்கெனவே விவாதித்திருக்கிறோம். எனவே அவையை ஒத்தி வைத்து இது குறித்து விவாதிக்க வேண்டிய தேவை இல்லை என்று கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு பேரவையை ஒத்திவைக்க வேண்டிய தேவை இல்லை என்று நான் கருதுவதால் இதற்கு அனுமதியை மறுக்கிறேன்.

DR. H. V. HANDE : Sir, will it be possible to have a sort of Cell to go into complaints of harassment of ryots wherever they are given so that they can be disposed of then and there and the farmers also can be satisfied?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மாவட்ட ஆட்சித் தலைவரிடம் அப்படிச் செய்ய வேண்டுமென்று நாம் சொல்லியிருக்கிறோம். மதுரை மாவட்டத்தில் ஒரு தவறு நடந்திருப்பதாக ஒரு பத்திரிகையில் பெரிய அளவிற்குப் போட்டவுடன் மாவட்ட ஆட்சித் தலைவர் அங்கு அது குறித்து விசாரித்து எனக்குத் தகவல் தந்தார்கள். எதுவும் நடக்கவில்லை. என்னிடம் அந்தக் கிராமத்திலுள்ளவர்கள் கூறி அவர்களோடு பேசி சமாதானம் செய்து அந்தக் கிராமத்திலுள்ளவர்கள் எவ்வளவு நெல் கொடுக்க வேண்டும் என்று ஒரு முடிவு கூட எடுக்கப்பட்டது. அவர்கள். திருப்தியாகச் சொன்னார்கள் என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆட்சித் தலைவர்கள் இப்படிப்பட்ட புகார்கள் வரும் போது ஆங்காங்குத் தலையிட்டு விசாரிக்கிறார்கள்.

### 3. நடைமுறைக் கேள்வி.

பேரவைத் துணைத் தலைவரைப் பதவி நீக்கக் கோரி ஓர் உறுப்பினர் கொடுத்த தீர்மானம் அறிக்கை கொடுத்த சில மணி நேரத்திற்குள்ளேயே திரும்பப் பெறப்பட்டது குறித்து.

Dr. H. V. HANDE : Sir, with the permission of the Chair, I would like to raise a point of order. Whenever we give notice of No Confidence Motion against the Hon. Speaker or Deputy Speaker the normal practice is to take it up after 14 days Day before yesterday when you were not in the Chair, it was announced that a notice of No Confidence Motion was given against the Deputy Speaker. Then at about 10'clock on thatday itselfthe Chairman announced that the motion was withdrawn. Sir, whenever such a motion is given notice of, it is given in all earnestness and seriosuness and therefore there is no question of withdrawing it. Now I would like to know from the Hon. Speaker whether it is is posible for him to give protection to members whenver they bring NoConfidence Mottion against the Hon. Speaker or Deputy Speaker. My information is that the member who gave notice of the No Confidence Motion against Deputy Speaker had withdrawn it almost on account of compuision and he was asked to withdraw it, I want to know whether the Rules of the Assembly permit it......

Thiru K. T. K. TANGAMANI : Sir, Rule 52 says—

"A member wishing to give notive of a resolution........for the removal of the Speaker or Deputy Speaker shall do so in writing to the Secretary ......

Provided that no resolution for the purpose shall be moved unless at least fourteen days' notice has been given........'

That is what the rule says. Now by convention/the Chair was/pleased to inform us that such a notice has been received. Where is the urgency for saying that the notice has been withdrawn ? The time for that is when it matures after 14 days and when it comes up before the House. Then it can be said that the motion has been withdrawn. That will be the procedure. We are governed by certain procedures. In the morning, we are told that such a notice has been given. Two hours later the House is informed that the resolution has been withdrawn.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைத் தலைவருக்கு

Thiru K. T. K. TANGAMANI : I do not want to use a stronger word. It is making a mockery of the procedure. It will mature after 14 days notice, i.e., on 11th or 12th April. On 12th April when it comes up before the House, the Chaur can say that the motion has been withdrawn. That will be the procedure. But what is done here is strange. First we are told that notice has been given. Two hours later we are told that it has been withdrawn. What I say is, the House should not be treated in this lighter vein. That is what I want to say.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தங்கமணி அவர்கள் சொன்னார்கள். பேரவைத் தலைவருக்குத் தகவல் வந்தது. அது போல் தீர்மானம் கொடுக்கப்பட்டது. அதை 14 நாள் கழித்தே கூட உறுப்பினர்களுக்குச் சொல்லியிருக்கலாம். ஆனால், எவ்வளவு விரைவில் உறுப்பினர்களுக்கு அதைச் சொல்ல முடியுமோ அவ்வளவு விரைவில் சொல்லி விடுவது நல்லது என்று அந்த முறையில் சொல்லப்பட்டது. அடுத்த நிமிடமே அதை நான் திரும்பப் பெற்றுக் கொள்கிறேன் என்று பேரவை தலைவருக்கு நோட்டீஸ் வந்து விட்டால், அதை உடனுக்குடன் அவைக்குச் சொல்லி விடுவதுதான் நல்லது, காத்திருக்கத் தேவையில்லை என்ற அடிப்படையில் சொல்லப்பட்டது; இதிலே எந்தவிதமான முறைகேடும் இல்லை.

டாக்டர் ஹாண்டே அவர்கள் எங்களுக்குப் பாதுகாப்புத் தர வேண்டுமென்று சொன்னார்கள். அது பேரவைத் தலைவரின் வேலை இல்லை.

4. அரசினர் சட்ட முன்வடிவு

தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/75).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, தமிழ் நாடு, 1975-ம ஆண்டு நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/75) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

பிரிவு 2, பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு, அட்டவணை ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இச்சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

5. 1975-76-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு - தொடர்ச்சி.

(அ) நிதிக் கோரிக்கை எண் 24—தொழில்கள்

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :